**IN THE COURT OF THE ADDITIONAL ASSISTANT SUBORDINATE COURT, HOSUR**

Date : 03 -04-2025

SC. 202/2022

அ.சா 2 – கேசவ மூர்த்தி ,

2025 ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 03 ம் நாள் கேசவ மூர்த்தி என்பவரின் சாட்சியாக விசாரரிக்கப்படுபவர் 1969 ம் ஆண்டு 54 வது சட்டப்பிரிவு (2) ஏற்பாட்டின் படி திரு கிருஷ்ணமூர்த்தி தலைமை எழுத்தர் அவர்களால் ஆணையிட்டு உறுதி வழங்கப்படுகிறது .

| | | | |
|---|---|---|---|
| பெயர் | கேசவ மூர்த்தி | தந்தை பெயர் | முனியப்பா |
| வயது | 31 | கிராமம் | ஆறுப்பள்ளி |
| வட்டம் | சூளகிரி | மாவட்டம் | கிருஷ்ணகிரி |

முதல் விசாரணை : –

நான் ஆறுப்பள்ளி கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். நான் தற்போது தனியார் நிறுவனத்தில் பணிபுரிந்து வருகிறேன். அ.சா. 1 சீனிவாசன் எனது நண்பர் . நானும் , எனது நண்பர் சீனிவாசனும் ஒரே ஊரைச் சார்ந்தவர்கள். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும், அவரும் ஒரே ஊரைச் சார்ந்தவர் தான். கடந்த 2020 ம் வருடம் பிப்ரவரி மாதத்தில் ஒரு நாள் இரவு 9.30 மணியளவில் நான் பக்கத்து ஊருக்கு சென்று வீட்டிற்கு வந்த போது எனது அம்மாவும், சித்தியும் எனது நண்பர் சீனிவாசனுக்கு அடி பட்டு மருத்துவமனையில் இருப்பதாக தெரிவித்தார்கள் அதை தெரிந்து கொண்ட நான், ஒசூர் காவேரி மருத்துவமனைக்கு சென்று எனது நண்பர் சீனிவாசனை பார்த்தேன். சீனிவாசனுக்கு பின் பக்க கழுத்தில் வெட்டுக் காயம் இருந்தது. அதற்கு மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக் கொண்டிருந்தார். 5 நாள்கள் அவர் உள்நோயாளியாக சிகிச்சை எடுத்துக் கொண்டிருந்தார். நான் 2 நாள்கள் அவருடன் தங்கி அவருக்கு உதவியாக இருந்தேன். அ.சா, 1 க்கு எப்படி பின் பக்க கழுத்தில் வெட்டுக் காயம் ஏற்பட்டது என்று அவரிடம் கேட்டபோது ,

சூளகிரியில் இருந்து இரு சக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்த போது , பெத்தன்னா என்பவரது வீட்டிற்கு முன்புறம் , சென்று கொண்டிருந்த போது , கார்த்திக் மற்றும் பால்ராஜ் வெட்டியதாக என்னிடம் சொன்னார். சூளகிரி காவல் நிலைய ஆய்வாளர் மருத்துவமனைக்கு வந்து விசாரித்து கார்த்திக் மற்றும் பால்ராஜ் ஆகியோரின் முகவரி மற்றும் போன் நம்பர் கேட்டார்,போன் நம்பர் தெரியாது என்று சொன்னேன். அந்த கார்த்திக் தான் நீதிமன்றத்தில் ஆஜராகி உள்ள எதிரி ஆவார். தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகஜரில் என்னுடைய கையொப்பம் இல்லை. போலிசார் என்னை மருத்துவமனையில் வைத்து விசாரித்தார்கள்.

( சாட்சியை பகுதியாக பிறழ் சாட்சியாக மாற்ற அரசு தரப்பில் அனுமதி கோர அனுமதி வழங்கப்பட்டது)

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை :**

கடந்த 11.02.2020 அன்று நடந்த சம்பவத்தின் போது சீனிவாசனின் பின் கழுத்தில் வெட்டப்பட்டு இரத்த வெள்ளத்தில் கீழே கிடந்தார். அந்த சமயத்தில் , அருகில் பெத்தன்னா குடும்பத்தார் ஓடி வந்ததை பார்த்து , எதிரிகள் ஓடி விட்டதாகவும் , காயம் பட்ட சீனிவாசனை நான் மற்றும் என் நண்பர் முரளி மூலமாக மருத்துவமனைக்கு அனுப்பி வைத்ததாகவும் , கடந்த 12.02.2020 அன்று காலை 10.00 மணிக்கு , சம்பவ இடத்திற்கு வந்த சூளகிரி காவல் உதவி ஆய்வாளரிடம் மருத்துவமனையில் இருந்த என்னை அழைத்து வந்து, கொடுத்த வாக்குமூலத்தின் பேரில் விசாரித்து சம்பவ இடத்தை அடையாளம் காட்டினேன் என்றும் ,என் முன்னிலையிலும் சாட்சி கோவிந்தராஜ் ஆகியோர் முன்னிலையிலும் , பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள் என்றும் , அதில் நான் சாட்சி கையெபாப்பம் செய்தேன் என்றும் , போலிஸ் விசாரணையில் சொல்லிவிட்டு , எதிரி ஒரே ஊரைச் சார்ந்தவர் என்பதால் , அவரை காப்பாற்ற வேண்டி, அவருக்கு ஆதரவாக எனது கையொப்பத்தையும் இல்லை என்று மறுத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று , சொன்னால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :**

இந்த வழக்கு சம்மந்தமாக நேரடியாக எதுவும் தெரியாது என்று சொன்னால் , சரியல்ல. காவேரி மருத்துவமனையில் என்னை விசாரித்த போது என் முன்னிலையில் டைப் செய்து ஆவணம் எதுவும் , தயார் செய்யப்படவில்லை என்றால் சரிதான். என் நண்பர் சீனிவாசனுக்கு அடிப்பட்ட போது திருமணம் ஆகவில்லை என்றால் சரிதான்.

Taken down by me in Open Court and interpreted and read over to the Witness and acknowledged by him/her to be correct.

Additional Assistant Subordinate Judge,
Hosur